சி.சி. 89/2022
அ.சா. 2 கார்த்திகைச்செல்வி
க/த/பெ. சுப்புராஜ்
21.03.2024
சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

1. எங்கள் வயல்காட்டுக்கு பக்கத்தில் உள்ள வயல்காட்டில் நடவு நடப்படவில்லை. நாங்களும் எதிரிகளும் சொத்து பிரிப்பது சம்பந்தமாக பேசி கொள்ளமாட்டோம் என்றால் இல்லை பேசி கொள்வோம். வயல் காட்டில் சகதியில் நடவு நட்டு கொண்டிருந்தோம். வாசு எவ்வளவு துாரத்தில் இருந்தார் என்றால் ஊர் பக்கத்தில் இருந்தார். சண்டை 1/2 மணி நேரம் நடந்தது. முத்துமுருகனை நாங்கள் வயல்காட்டிற்கு செல்கிறோம் வா என்று சொல்லிவிட்டு சென்றோம். முத்துமுருகன் சண்டை நடக்கும்போது வரவில்லை. எனக்கு காயம் எதுவும்இல்லை. சண்டை நடந்த முடிந்தபிறகு நானும் எனது அம்மா அசா1ம் வீட்டிற்கு வந்துவிட்டோம். எதிரிகள் காவல் நிலையம் சென்றுவிட்டார்கள். எதிரிகள் மருத்துவமனையில் சேர்ந்த விபரம் அப்போதே தெரியும். அதற்கு பிறகு நானும் எனதுஅம்மாவும் நரிக்குடி காவல் நிலையம் சென்றோம். புகார் மனு நரிக்குடியில் வைத்துஎழுதப்பட்டது. புகார் கொடுக்கும் போது மணி 3 இருக்கும். அப்போதுதான்போலிசார் எதிரிகளும் மருத்துவமனைக்கு சென்றதாக சொன்னார்கள். புகார் கொடுத்துவிட்டு இருவரும் வீட்டிற்கு வந்துவிட்டோம். வாசு எதிரே வந்தார் அவரிடம் சண்டை பற்றி சொன்னேன். அன்றைய தேதியில் எங்கள் மீது வழக்கு போட்டது எங்களுக்கு தெரியாது. சண்டையில் எதிரிகளை நாங்கள் அடித்து காயப்படுத்தினோம் என்றாலும் எதிரிகள் மருத்துவமனையில் சேர்ந்தவிபரம் தெரிந்து காரியாபட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரியல்ல. காரியாபட்டி அரசு மருத்துவமனையில் இருக்கும்போது எதிரி கொடுத்த புகாரின் பேரில் எனது தம்பியை போரிசார் பிடித்துவிட்டதாக தகவல் கிடைத்ததும் மருத்துவமனையில் இருந்து வெளியே வந்துவிட்டோம். அன்றைய தேதியில் எதிரிகளை அடித்து காயப்படுத்தினோம் என்றாலும் எதிரிகள் மருத்துவமனையில் சேர்ந்த விபரம் தெரிந்து காவல் நிலையத்திற்கு சென்று பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல் எதிரிகள் யாரும் எங்களை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை எதிரிகள் பல்லில் குத்தி ரத்தம் வரவில்லை என்றாலும் எனது தம்பிக்கு வலது கை காயம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. பெரியசாமி எனது அம்மாவை தலைமுடியை பிடித்து இழுக்கவில்லை என்றாலும் சங்கீதா என்னை பெரிய கல்லை வைத்து நெற்றியில் வீக்க காயம் ஏற்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
மறு விசாரணை –
2.இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

சி.சி. 89/2022
அ.சா. 1 ராக்கு
க/த/பெ. சீனிவெள்ளை
21.03.2024

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

1. எனது கணவர் சீனிவெள்ளைக்கு நான்2 வதுதாரம் ஆவேன். மூத்த தாரம்நல்லம்மாள் ஆவார். மூத்த தாரத்திற்கு 2 பிள்ளைகள். பொன்னாத்தாள் 2 வது எதிரி, சித்ரா 3 வது எதிரி ஆகியோர் நல்லமாளின் பிள்ளைகள். பொன்னத்தாள் கணவர் 1ம் எதிரி பெரியசாமி என்றால் சரிதான். பொன்னாத்தாள் சங்கீதவள்ளி என்றால் சரிதான். எங்களுக்குள் சொத்து பிரிப்பது சம்பந்தமாக பிரச்சனை என்றால் இல்லை. எங்களுக்குள் பாகஸ்தி ஏற்பட்டதா என்றால் சீனிவெள்ளையின்சொத்துக்களை கொஞ்சம் கொஞ்சம்இருதரப்பினரும் உழுது வருகிறோம். சொத்துசம்பந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது. பொன்னாத்தாள், சித்ரா ஆகியோருடன்பேச்சு வார்த்தை இல்லை. சண்டை வயல்காட்டில் நடந்தது. வயல்காட்டில் நானும் எனது மகள் கார்த்திகைசெல்வியும் இருந்தோம். எதிரிகளுக்கு பக்கத்தில் வயல்காடு இல்லை. வயல்காட்டில் இரு தரப்பினருக்கும் வாய் சண்டை ஏற்படவில்லை. நானும் எனது மகளும் வயல்காட்டில் உழுது கொண்டிருந்தோம். சண்டை 11 மணிக்கு ஆரம்பித்து 1/2 மணிநேரம் நடந்தது. வேறு யாரும் வரவில்லை. சண்டை நடந்ததேதி 6.11.2020 ம் தேதியாகும். சண்டையை வாசு என்பவர் விலக்கிவிட்டார். வாசு எங்கள் ஊர்பஞ்சாயத்து தலைவர் ஆவார். 11 மணிக்கு சண்டை நடந்து முடிந்தவுடன் காவல் நிலையத்திற்கு அன்றைய தினமே 12 மணிக்கு சென்றுவிட்டோம். நரிக்குடி காவல் நிலையத்திற்கு நானும் எனதுமகள் கார்த்திக்செல்வி, எனதுமகன்முத்துமுருகன் ஆகியோர் சென்றோம். அங்குசென்று நடந்ததை சொல்லி புகார் மனு கொடுத்தேன். புகார் மனுவில் நான் மட்டும் கையொப்பம் செய்தேன். நரிக்குடி காவல் நிலையத்தில் இருந்து வீட்டிற்கு வந்துவிட்டோம். போலிசார் மருத்துவமனைக்கு போக சொன்னார்கள் நமூனா கொடுக்கவில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த காயமும் கிடையாது என்பதால் தான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. திருச்சுழி மருத்துவமனைக்கு சென்றேன் அங்கு எடுக்கவில்லை. நான் முதல் விசாரணையில்

சொல்வதுபோல் எதிரிகள் யாரும் எங்களை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகளை எதிரிகள் பல்லில் குத்தி ரத்தம் வரவில்லை என்றாலும் எனது மகனுக்கு வலது கை காயம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. 6ம் தேதி காலை 11மணிக்கு நானும் எனது மகளும் , கெச்சம்மாள், எனது மகன் முத்துமுருகன் சேர்ந்து எதிரிகளை அடித்து காயப்படுத்திவிட்டோம் என்றாலும் எதிரிகள் மருத்துவமனையில் இருப்பது தெரிந்து எங்கள் மீது போலிசார் வழக்கு போட்டது தெரிந்து மறுநாள் காரியாபட்டி மருத்துவமனையில் வெளிநோயாளியாக சேர்ந்து எதிரிகள் மீது எதிர்வழக்கு போட வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி எங்களை எதிரிகள் அடித்து காயப்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

2.இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.